**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – கல்வி – விடுதிகள் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – சென்னை மாவட்டம், இராயபுரம், பழுதடைந்த நிலையில் உள்ள தொழிற்கல்வி பயிலும் மகளிர் விடுதிக் கட்டடத்தினை இடித்துவிட்டு, அந்த இடத்திலேயே ரூ. 3,52,76,432/- மதிப்பீட்டில் இரண்டு மாணவியர் விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் – நிர்வாக ஒப்பளிப்பு – ஆணை வெளியிடபப்டுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–2) துறை**

அரசாணை (நிலை) எண்:69

நாள் : 19.12.2018
விளம்பி வருடம்
மார்கழி திங்கள் 4–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2049

படிக்கப்பட்டது:–

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடிதம் எண். த.3/18498/2018, நாள். 27.09.2018 மற்றும் 08.10.2018.

-----

**ஆணை:**

சென்னை மாவட்டத்தில் 30.09.2018 அன்று தமிழ்நாடு அரசு சார்பில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தொடர்பாக கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

**“ இராயபுரம், தொழிற்கல்வி பயிலும் மகளிர் விடுதிக் கட்டடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அக்கட்டடத்தினை இடித்துவிட்டு, அந்த இடத்திலேயே ரூ. 3 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பில் இரண்டு மாணவியர் விடுதிகள் கட்டப்படும் ”**

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, இராயபுரம், தொழிற்கல்வி பயிலும் மகளிர் விடுதிக் கட்டடம் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டடத்தினை இடித்துவிட்டு, அவ்விடத்தில் 1904.86 சதுர அடி பரப்பளவில் நான்கு தளங்களில் மின் தூக்கி வசதியுடன் தரைத் தளத்தில் தலா இரண்டு விடுதிக் காப்பாளர் அறை, உணவுக் கூடம், பொருட்கள் வைப்பு அறை மற்றும் சமையலறைகளும், முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் தளங்களில் 8 துயில் கூடங்கள், ஒவ்வொரு அடுக்கிலும் இரண்டு கழிப்பறை Block கள் ஆகிய வசதிகளுடன் ரூபாய் 3 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவின மதிப்பீட்டில் இரண்டு மாணவியர் விடுதிகள் புதிதாகக் கட்டுவதற்காக தாட்கோ மேலாண்மை இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையுடன் கூடிய கருத்துருவை தமது பரிந்துரையுடன் ஆதி திராவிடர் நல இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தின் மூலம் அரசுக்கு அனுப்பி உரிய ஆணை வெளியிடுமாறு கோரியிருந்தார்.

3. ஆதி திராவிடர் நல இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, தாட்கோ மேலாண்மை இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையில் எதிர்பாரா செலவினங்கள் தலைப்பில் கோரப்பட்ட தொகையான ரூ. 14,81,988– ஐ நீக்கியும், மேற்பார்வை மற்றும் திடீர் செலவினங்களின் கீழான செலவினத்தை 2.5 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாகக் குறைத்தும் ரூ. 3,52,76,432/- ( ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்திரெண்டு

(த.பி.பா.)

இலட்சத்து எழுபத்து ஆறாயிரத்து நாநூற்று முப்பத்து இரண்டு மட்டும்) மதிப்பீட்டில், பழுதடைந்த நிலையில் உள்ள இராயபுரம், தொழிற்கல்வி பயிலும் மகளிர் விடுதிக் கட்டடத்தினை இடித்துவிட்டு, அந்த இடத்தில் இரண்டு மாணவியர் விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே குறிப்பிட்டுள்ள கட்டுமானப் பணி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), சென்னை நிறுவனத்தால் உரிய ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. மேலே ஒப்பளிக்கப்பட்ட கட்டுமானப் பணிக்கான நிதி பணி முன்னேற்றத்தின் அடிப்படையில் மூன்று தவணைகளாக விடுவிக்கப்படும்.

6. இத்திட்டத்தை அரசு விதிமுறைகளைப் பின்பற்றி உரிய காலத்தில் செய்து முடிக்கவும், பணியினை கண்காணித்து நிறைவடைந்த நிலையில் அறிக்கை ஒன்றினை அரசுக்கு அனுப்புமாறும் ஆதி திராவிடர் நல இயக்குநர், மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.62976/ஆதி(ம)பந/2018, நாள் 17.12.2018–இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஒட்டெம் டாய்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை –600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –600 006/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 600 001/05/35.
சம்பளக் கணக்கு அலுவலர், (கிழக்கு), சென்னை – 600 008.
மாவட்ட ஆட்சியர், சென்னை.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், சென்னை.
மாவட்ட கருவூல அலுவலர், சென்னை.

**<u>நகல்:</u>**
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம்.
பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை – 600 005.
மாண்புமிகு அமைச்சர், (ஆதி(ம)பந) அவர்களின் முதுநிலை சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –600 009.
நிதி(ஆதி(ம)பந)துறை, சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர், சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1/ஆதிந.4/ ப.மே.1 ) துறை, சென்னை –600 009.
இருப்புக்கோப்பு/உதிரிநகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**